மோட்டார் வாகன விபத்து கோரிக்கை உரிமை தீர்ப்பாயம்/
முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை :– திருமதி. P. சுதா, B.Com., B.L.,
மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய நடுவர்
(முதன்மை சார்பு நீதிபதி) மயிலாடுதுறை.

திருவள்ளுவராண்டு 2056, பராபவ வருடம், சித்திரை மாதம் 05 ஆம் நாள்
2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18 ஆம் நாள், சனிக்கிழமை

**மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய அசல் மனு எண்.27/2020**

சேகர், (வயது 47),
த.பெ. சண்முகம், .... மனுதாரர்

**//எதிர்//**

1. செந்தில்குமார் (Owner),
த.பெ.சின்னையன்,

2. மேலாளர்,
ஸ்ரீராம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி,
ஜெய்பூர்– ராஜஸ்தான். .... எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்பாக 10.04.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரருக்காக வழக்குரைஞர் திரு.P.அன்புரோஸ் அவர்கள் ஆஜராகியும், 1 ஆம் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் திரு.P.இராஜாஜி அவர்கள் ஆஜராகி, வக்காலத்து தாக்கல் செய்து, அதன் பின்னர் 1 ஆம் எதிர்மனுதாரருக்காக ஆஜராகாததால் 1 ஆம் எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினர் நிலையில் வைக்கப்பட்டும், 2 ஆம் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் திரு.R.சேயோன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் மற்றும் 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகளைக் கேட்டும், மனுதாரர் தரப்பு எழுத்துமூல வாதுரை பரிசீலனை செய்யப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்றைய தினம் இந்நீதிமன்றம் வழங்கும்....

**உத்தரவு**

இம்மனு மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 166 ன் கீழ் மனுதாரர் சேகர், வயது 47, த.பெ.சண்முகம் என்பவர் சாலை விபத்தில் கொடுங்காயம் அடைந்ததற்கு இழப்பீடாக

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:35:01 +0530

ரூ.10,00,000/-மும் (ரூபாய். பத்து லட்சம் மட்டும்) மனுதாக்கல் செய்த தேதி முதல் தொகை செலுத்தும் வரைக்கும் வட்டி மற்றும் செலவுத் தொகையையும் சேர்த்து 1, 2 எதிர்மனுதாரர்களிடம் இருந்து பெற்றுத் தரக்கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இம்மனு முதலில் மாண்புமிகு மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்தில் 12.03.2020, 19.06.2020 ஆகிய தேதிகளில் தாக்கல் செய்யப்பட்டு, அங்கு 07.07.2020 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன் பிறகு மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற உத்தரவு எண்.1/2020, நாள் 02.01.2020 தேதியிட்ட உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு 20.07.2020 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

அதன்பிறகு மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற உத்தரவு எண்.332/2022, நாள் 08.11.2022 தேதியிட்ட உத்தரவுப்படி சீர்காழி சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, மீண்டும் மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற உத்தரவு எண்.355/2022, நாள் 24.11.2022 தேதியிட்ட உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு 16.12.2022 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

<u>02. மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் :-</u>

மனுதாரர் கடந்த 09.02.2020 ஆம் தேதி மாலை சுமார் 04.45 மணிக்கு T.N 82 9775 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தில் அவரது சகோதரருடன் புத்தூர் – மாதானம் மெயின்ரோட்டில் பெரிய கொப்பியம் வாகேசன் வீட்டின் எதிரே வடக்கிலிருந்து தெற்குநோக்கி சாலை விதிகளை அனுசரித்து இடதுபுற ஓரமாக சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 51 T 8938 என்ற எண்ணுள்ள மகேந்திரா டிராக்டரின் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் நிலை தடுமாறி கீழே விழுந்த மனுதாரருக்கு வலது காலில் முட்டிக்கு கீழ் இரண்டு எலும்புகளில் எலும்பு முறிவும், வலது கால் முட்டிக்கு கீழ் கிழிந்த காயமும், இடது காலில் சீராய்ப்பு காயமும், இரண்டு கைகளிலும்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:35:09 +0530

சிராய்ப்பு காயமும், நெஞ்சு மற்றும் விலாவில் பலத்த உள்காயமும் ஏற்பட்டு, 108 ஆம்புலன்ஸ் மூலம் சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 09.02.2020 ஆம் தேதி உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, வலது கால் முட்டிக்கு கீழ் ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு பிளேட் மற்றும் ஸ்குருக்கள் பொருத்தி அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகவும், வலது காலில் ஏற்பட்ட கிழிந்த காயத்திற்கு 14 தையல் போட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், பின்பு மற்ற காயங்களுக்கும் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு 27.02.2020 அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்பு தொடர்ந்து தனியார் மருத்துவமனையில் வெளி நோயாளியாக சிகிச்சை பெற்று வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரருக்கு விபத்தின் போது 47 வயது என்றும், மனுதாரர் 15 வருடங்களுக்கு மேலாக கொத்தனார் வேலை செய்து மாதம் ரூ.18,000/- வரை சம்பாதித்து தனது குடும்பத்தை காப்பாற்றி வந்ததாகவும், மேற்படி விபத்தில் மனுதாரருக்கு வலது காலில் ஏற்பட்ட இரண்டு எலும்பு முறிவினால் சதைப்பகுதி முற்றிலும் சேதமடைந்தும், நரம்புகளும் சேதமடைந்து ரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டதால் வலது காலின் அசைவுத்திறன் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இடது காலை விட வலது காலின் உயரம் சுமார் 2 செ.மீ. அளவுக்கு குறைந்து காணப்படுவதால் வலது காலை தாங்கியும், மற்றும் ஊன்றுகோலுடன் தான் நடக்க முடிகிறது என்றும், விபத்தின் காரணமாக தான் செய்து வந்த கொத்தனார் வேலையை செய்ய முடியாமல் நிரந்தர வருமான இழப்பும், நிரந்தர ஊனமும் ஏற்பட்டுள்ளதாகவும், மனுதாரர் தனது அன்றாட பணிகளை செய்ய முடியாததால் மனுதாரரை பராமிக்க தனியாக ஒரு நபர் தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விபத்து சம்மந்தமாக ஆனைக்காரன் சத்திரம் காவல் நிலையம் குற்ற எண்.70/2020 என்ற நம்பரில் இதச பிரிவுகள் 279, 337 ன் கீழ் TN 51 T 8938 என்ற எண்ணுள்ள மகேந்திரா டிராக்டர் ஓட்டுனர் மீது வழக்கு பதிவு செய்துள்ளது என்றும், அவர் தன் மீதுள்ள குற்றத்தை ஒப்புக்கொண்டு சீர்காழி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தியுள்ளதாகவும், இதிலிருந்து விபத்தானது TN 51 T

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:35:16 +0530

8938 என்ற எண்ணுள்ள டிராக்டர் ஓட்டுனரின் அஜாக்கிரதையின் காரணமாகத்தான் ஏற்பட்டுள்ளது என்பது தெறியவருகிறது என்று குறிப்பிட்டு இவ்விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனம், வலி, துன்பம், மருத்துவச் செலவு, எதிர்கால மருத்துவசெலவு என எல்லாவற்றுக்கும் சேர்த்து ரூ.10,00,000/- நஷ்டயீடாக 1, 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து பெற்றுத் தரக்கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>03. 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :-</u>**

மனுதாரரால் ரூ.10,00,000/-இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது சட்டப்படியோ அல்லது வழக்கின் உண்மைகளின் அடிப்படையிலோ விசாரணைக்கு உகந்தது அல்ல என்றும், தள்ளுபடி செய்யப்படத் தக்கது என்றும், மனுதாரர் குற்றம் சாட்டியுள்ளது போல TN 51 T 8938 என்ற பதிவு எண் கொண்ட டிராக்டர் வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் இவ்விபத்து நிகழவில்லை, 1 ஆம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் இவ்விபத்து நிகழ்ந்தது என்பதை மனுதாரர் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளதாகவும், விபத்து நிகழ்ந்த சமயத்தில் TN 82 9775 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற மனுதாரரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலுமே இவ்விபத்து நிகழ்ந்துள்ளது என்றும், காவல்துறையினர், இவ்விபத்தை முறையாக விசாரிக்காமலேயே, முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் மீது தவறாகப் பொறுப்பைச் சுமத்தியுள்ளது, மேலும், விபத்து நிகழ்ந்த சமயத்தில் மனுதாரர் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமத்தை வைத்திருக்கவில்லை, விபத்து நிகழ்ந்த சமயத்தில் மனுதாரர் தலைக்கவசம் (helmet) அணியாமல் இருந்துள்ளார், இதன் மூலம் மனுதாரரே விபத்து நிகழ்வதற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளார், விபத்து நிகழ்ந்த சமயத்தில் TN 51 T 8938 என்ற பதிவு எண் கொண்ட டிராக்டர் வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்பதையும், மேற்கூறிய வாகனத்தை ஓட்டுவதற்கு அதன் ஓட்டுநர் செல்லுபடியாகும் உரிமத்தைப் பெற்றிருந்தார் என்பதையும் மனுதாரர் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளதாகவும், மேற்படி வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டிருந்தாலும், அக்காப்பீடு எப்போதும் காப்பீட்டுக் கொள்கையின்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:35:23 +0530

குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதே ஆகும் என்றும், எனவே, எந்தவொரு இழப்பீட்டிற்கும் 2 ஆம் எதிர்மனுதாரர் பொறுப்பாக இயலாது என்றும், விபத்து நிகழ்ந்த தேதியில், மேற்படி வாகனம் சாலையில் இயங்குவதற்குத் தேவையான செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ் (R.C.), காப்பீட்டுச் சான்றிதழ் (I.C.), தகுதிச் சான்றிதழ் (F.C.) போன்ற ஆவணங்களைக் கொண்டிருந்தது என்பதை மறுப்பதாகவும், வாகனத்தின் உரிமையாளரான முதல் எதிர்மனுதாரர் மௌனமாகவும், ஒத்துழைப்பு அளிக்காமலும் உள்ளதாகவும், எனவே, மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 170 இன் கீழ், காப்பீடு செய்யப்பட்டவருக்குக் கிடைக்கக்கூடிய அனைத்துச் சட்டரீதியான உரிமைகளையும் 2 ஆம் எதிர்மனுதாரர் எடுத்துக்கொள்ள அனுமதியளிக்க வேண்டும் என்றும், வாகனத்தின் உரிமையாளரிடமிருந்து இதுவரை எந்தவொரு இழப்பீட்டுக் கோரிக்கையையும் பெறவில்லை என்றும், எனவே அக்கோரிக்கையை மறுப்பதாகவும், விபத்து நிகழ்வதற்கு முழுகாரணம், முதல் எதிர்மனுதாரரான வாகன ஓட்டுநரின் கவனக்குறைவான செயலே என்பதை மனுதாரர் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் தனது உண்மையான வயதை மறைத்துள்ளதாகவும், மனுதாரர் 57 வயதுக்கும் மேற்பட்டவர், அவரது வயதை நிரூபிப்பதற்காக மனுதாரர் எந்தவொரு சாட்சியத்தையும் சமர்ப்பிக்கவில்லை, மனுதாரர் தனது வயதை நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார், மனுதாரர் கொத்தனாராகப் பணிபுரிந்து மாதம் ரூ.18,000/— ஈட்டி வந்தார் என்பதை நிரூபிப்பதற்கு எந்தவொரு ஆவணச் சாட்சியமும் சமர்ப்பிக்கப்படவில்லை, அவருக்கு நிலையான வருமானம் ஈட்டும் திறன் ஏதும் இல்லை, தனது தொழில் மற்றும் வருமானத்தை நிரூபிப்பதற்கான எந்தவொரு ஆவணத்தையும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை, மனுவில் விவரிக்கப்பட்டு உள்ளவாறு, மனுதாரர் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது டிராக்டர் மோதியதில் அவருக்குப் பலத்த காயங்கள் ஏற்பட்டன என்ற கூற்றை மறுப்பதாகவும், விபத்து நிகழ்ந்த உடனேயே, மனுதாரர் சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், அதைத் தொடர்ந்து தனியார் மருத்துவமனையிலும் உள்நோயாளியாகச் சிகிச்சை பெற்றார் என்பதை மறுப்பதாகவும், மனுதாரரே தனது கவனக்குறைவின் காரணமாக விபத்திற்குத் தானும் ஒரு வகையில் காரணமாக அமைந்தார் என்றும், விபத்தை வரவழைத்துக்கொண்டார் என்றும் தெரியவருகிறது

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:35:29 +0530

என்றும், எனவே, 'கூட்டு கவனக்குறைவு' (Contributory negligence) எனும் கோட்பாடு, இவ்வழக்கிற்கு முழுமையாகப் பொருந்தக்கூடியதாகும் என்றும், மனுதாரர் ரூ.10,00,000/−இழப்பீடு கோரியுள்ளார், இது ஏற்கத்தக்கவையல்ல, இதனை நிரூபிப்பதற்கு மனுதாரர் தரப்பில் எவ்வித ஆவணமும் சமர்ப்பிக்கப் படவில்லை, மனுதாரர் முன்வைத்துள்ள இக்குற்றச்சாட்டுகளை, முறையான வாய்மொழிச் சாட்சியங்கள் மற்றும் ஆவணச் சான்றுகள் வாயிலாக மனுதாரர் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார், மனுவில் குறிப்பிட்டுள்ள பல்வேறு கூற்றுகளையும், குறிப்பாக ஊனத்தின் அளவை உறுதிப்படுத்துவதற்காக, மனுதாரர் ஆவணங்களின் தன்மையை மிகைப்படுத்திக் காட்டியுள்ளார், காயங்களின் தன்மை, சிகிச்சை காலம் மற்றும் மருத்துவத் தகவல்கள் குறித்து, மனுதாரர் தரப்பில் ஏற்பட்டதாகக் கூறப்படும் செலவுகளை நிரூபிப்பதற்கான தொடர்புடைய ஆவணங்களை மனுதாரர் தாக்கல் செய்யவில்லை, மருத்துவ அறிக்கையின்படி, மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் எவ்வித சிகிச்சையும் தேவைப்படாத மிகச் சிறிய சிராய்ப்பு மட்டுமே ஆகும், எனவே, இழப்பீடு கோருவதற்கு இடமில்லை, மனுதாரர் தனது குற்றச்சாட்டுகளை முறையான மருத்துவ மற்றும் ஆவணச் சான்றுகள் வாயிலாக நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார், மனுதாரருக்கு இழப்பீடு பெறுவதற்கான உரிமை இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும் அது நியாயமான மற்றும் பெயரளவு இழப்பீடாகவே இருக்க வேண்டுமே தவிர, அதற்கான வட்டி எதையும் பெற மனுதாரருக்கு உரிமை இல்லை, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்பின்படி, மனுதாரருக்கு வட்டி கோருவதற்கான உரிமையே இல்லை, அவ்வாறு இருக்கையில் 12% என்ற மிகைப்படுத்தப்பட்ட விகிதத்தில் வட்டி கோருவதற்குச் சிறிதும் இடமில்லை, உச்ச நீதிமன்றத்தின் அத்தீர்ப்பின்படி, மனுதாரர் அதிகபட்சமாக 6% வட்டி மட்டுமே கோர முடியும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டியுள்ளார்.

**04.** முதல் எதிர்மனுதாரர் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணையை பெற்றுக்கொண்டும் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாததால் தோன்றாத்தரப்பினர் நிலையில் வைக்கப்பட்டுள்ளார்.

**05. இம்மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனைகள் :−**

1. இந்த விபத்து யாருடைய கவனக்குறைவின் காரணமாக ஏற்பட்டது?

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:35:36 +0530

2. மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் யார்?

3. மனுதாரருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

4. மனுதாரருக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரம் என்ன?

**06.** 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில், 1 ஆம் எதிர்மனுதாரருக்காக வாதம் செய்ய வேண்டி, தனியாக மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 170 ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**07.** இம்மனு விசாரணையின் போது மனுவின் மனுதாரர் சேகர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.1 ன் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. மயிலாடுதுறை ஜி.வி.மருத்துவமனை மருத்துவர் ஸ்ரீதர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.2 ன் மூலம் ம.சா.ஆ.8 மற்றும் ம.சா.ஆ.9 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் அந்நிறுவனத்தின் சட்ட அலுவலர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எ.ம.சா.1 ன் மூலம் எ.ம.சா.ஆ.1 தாக்கல் செய்யப்பட்டு, குறியீடு செய்யப்பட்டுள்ளது. எ.ம.சா.2 ஆக சீர்காழி மோட்டார் வாகன அலுவலக இநிலை உதவியாளர் விசாரிக்கப்பட்டுள்ளார். எ.ம.சா.2 ன் மூலம் சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, குறியீடு செய்யப்பட்டுள்ளது. எ.ம.சா.3 ஆக ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் விசாரிக்கப்பட்டுள்ளார். எ.ம.சா.3 ன் மூலம் ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. நாகப்பட்டினம் மாவட்ட மருத்துவக்குழுவால் வழங்கப்பட்ட ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>08. பிரச்சனை எண்.1 :–</u>**

i) மனுதாரர் தரப்பில் மனுவை ஒத்துரைத்து எழுத்துமூல வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.1 தனது சாட்சியத்தில் மனுவை ஒத்துரைத்து சாட்சியம் அளித்து, விபத்தை ஏற்படுத்திய வாகனம் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதாகும் என்றும், மேற்படி வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டும், அவரது தரப்பு சாட்சியத்திற்கு ஆதரவாக முதல் தகவலறிக்கை நகல் ம.சா.ஆ.1 ஆகவும், வாகன பதிவு சான்று நகல் ம.சா.ஆ.2

SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2026.04.18 19:35:42 +0530

ஆகவும், முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு சான்று நகல் ம.சா.ஆ.3 ஆகவும், விபத்து பதிவேடு ம.சா.ஆ.4 ஆகவும், டிஸ்சார்ஜ் சம்மரி ம.சா.ஆ.5 ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் மற்றும் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.6 ஆகவும், மருத்துவபில்கள் ம.சா.ஆ.7 ஆகவும் தாக்கல் செய்து குறியீடு செய்யுமாறு கோரியுள்ளார். நாகப்பட்டினம் மாவட்ட மருத்துவக் குழுவால் வழங்கப்பட்ட ஊனச் சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ***ம.சா.1 குறுக்கு விசாரணையில் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றாலும், இரண்டும் நேருக்கு நேர் மோதியது என்றாலும் சரிதான் என்றும், இருசக்கர வாகனம் ஒட்ட ஒட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான், மேற்படி இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான்,*** தலைகவசம் அணிந்து சென்றதாக மனு, பிரமாண வாக்குமூலம், முதல் தகவலறிக்கை ஆகியவற்றில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

ii) ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட ஜி.வி.மருத்துவமனையின் மருத்துவர் ஸ்ரீதர் அவரது சாட்சியத்தில் மனுதாரர் சேகர் 02.03.2023 அன்று ம.சா.2 யிடம் சிகிச்சைக்கு வந்தார் என்றும், அவரை பரிசோதனை செய்ததில் வலது காலில் வலி மற்றும் வீக்கம் உள்ளதாக கூறினார், மருத்துவ ஆவணங்களை பார்வையிட்டதில் அவருக்கு சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு, வலது காலில் டிபியாவில் அதாவது முட்டிக்கு கீழ் ராடு, ஸ்குரு பொருத்தி அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது, அதனை பரிசீலனை செய்ததிலும், அவரது முன் ஆவணங்களை பார்த்தும், ராடு மற்றும் ஸ்குரு பொருத்தப்பட்ட விபரம் தெரிந்து கொண்டார் என்றும், அவருக்கு நுண்கதிர் படம் எடுக்கப்பட்டு அதை பரிசீலித்ததில் அவருக்கு பொருத்தப்பட்ட ஸ்குரு நீண்ட நிலையில் இருந்தது, அதனால் அவருக்கு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது, எனவே ராடு மற்றும் ஸ்குருவை நீக்க மருத்துவ சிகிச்சை தேவை என்று பரிந்துரை வழங்கியதாகவும் அந்த சிகிச்சைக்கு ரூ.50,000/- ஆகும் என்று சான்று வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். அவருக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படம் ம.சா.ஆ.8 ஆகவும், ம.சா.2 வழங்கிய சான்று ம.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.2 குறுக்கு விசாரணையில் மனுதாரர் சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:35:49 +0530

மருத்துவமனையில் 3 ஆண்டுகளுக்கு முன்பு அறுவை சிகிச்சை செய்துள்ளார் என்றால் சரிதான், அவருக்கு ஏற்பட்ட ஊனம் என்ன வகைபாடு என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான், இன்று சாட்சி சொல்லும் தேதியில் தான் மனுதாரர் பரிசோதனைக்கு ஆஜரானார் என்றால் சரிதான், இன்று தான் அவருக்கு சான்றும் வழங்கியுள்ளேன், ம.சா.ஆ.8 ல் மனுதாரருக்கு எலும்பு கூடிவிட்டதாக உள்ளது என்றால் ஆமாம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iii) எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் சட்ட அலுவலர் ஸ்டீபன் ஜேம்ஸ் மைக்கேல் அவரது சாட்சியத்தில் செந்தில்குமார் என்பவர் மீது வாகன விபத்து பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்து நடந்த நாள் 09.02.2020, காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது 17.02.2020 மதியம் 3 மணி, ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலைய சிறப்பு உதவியாளர் சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று மனுதாரர் சேகர் என்பவரிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், வாக்குமூலத்தில் காலதாமதத்திற்கான காரணம் சொல்லப்படவில்லை என்பதால் வாகன பரிமாற்றம் நடந்திருக்கலாம் என்ற ஐயம் ஏற்பட்டுள்ளதாகவும், 1 ஆம் எதிர்மனுதாரர் செந்தில்குமார் விபத்து காலத்தில் ஓட்டுனர் உரிமம் இல்லாமலும், தலைகவசம் அணியாமலும் வாகனத்தை இயக்கி காப்பீட்டு உரிமை மீறல் செய்துள்ளதால் அவரே இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், குறுக்கு விசாரணை சாட்சியத்தில் விபத்து பதிவேட்டில் டிராக்டர் மோதியதாக சொல்லப்பட்டுள்ளது, எந்த நம்பர் என்று சொல்லப்படவில்லை, மருத்துவவிடுவிப்பு குறிப்பிலும் டிராக்டர் மோதியதாக சொல்லப்பட்டுள்ளது, ஆனால் வாகன எண் குறிப்பிடப்படவில்லை, முதல் தகவல் அறிக்கையில் 8 நாட்கள் தாமதமாக வாகன எண் குறிப்பிடப்பட்டுள்ளது, விபத்து ஏற்பட்டதாக சொல்லப்படும் வாகனத்திற்கு காப்பீடு உள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iv) எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட சீர்காழி மோட்டார் வாகன அலுவலக இளநிலை உதவியாளர் அவரது சாட்சியத்தில் மேற்படி வழக்கில் சாட்சிம் அளிக்க அவருக்கு அத்தாட்சி கடிதம் வழங்கப்பட்டது என்றும், ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலைய குற்ற எண்.70-2020 ல் ஈடுப்பட்ட இரு வாகனங்களையும் ஆய்வு

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:35:56 +0530

மேற்கொள்ளப்பட்டது என்றும் ***TN 82 Y 9775 Hero Super splendor இருசக்கர வாகனத்தை ஓட்டிய மனுதாரர் சேகர் என்பவருக்கு ஓட்டுனர் உரிமமும், காப்பீடும் தாக்கல் செய்யப்படவில்லை, மற்றொரு வாகனமான TN 51 T 8938 மகேந்திரா டிராக்டர் வாகனம் ஆகும், அதன் வாகன ஓட்டுனர் செந்தில்குமாரின் ஓட்டுனர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை*** என்று சாட்சியம் அளித்துள்ளார். எ.ம.சா.2 ற்கு சாட்சியம் அளிக்க வழங்கிய அத்தாட்சி கடிதம் சா.சா.ஆ.1 ஆகவும், TN 82 Y 9775 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் சா.சா.ஆ.2 ஆகவும், TN 51 T 8938 மகேந்திரா டிராக்டர் வாகனத்தின் ஆய்வறிக்கை நகல் சா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. குறுக்கு விசாரணையில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்பதால் தண்டம் எதுவும் விதிக்கப்படவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

v) எ.ம.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சாமிநாதன் அவரது சாட்சியத்தில் மனுதாரருக்கு 09.02.2020 அன்று விபத்து ஏற்பட்டது, 17.02.2020 அன்று புகார் வாக்குமூலம் பெற்று, வழக்கு பதிவு செய்யப்பட்டது, காலதாமதத்திற்கு மனுதாரர் தான் காரணம், இந்த வழக்கு சம்பந்தமாக 02.12.2021 அன்று வழக்கு எதிரி மீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்படாமல் வழக்கு முடிக்கப்பட்டுள்ளது என்றும், குறுக்கு விசாரணையில் புகார்தாரர் சேகர் என்பவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக தகவல் கிடைத்து அதன் அடிப்படையில் தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், டிராக்டர் ஓட்டுனர் செந்தில்குமார் மீது தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், ***விபத்து காலம் கொரோனா காலம் என்பதால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவில்லை, இவ்வழக்கில் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர், தகவல் கிடைத்து வழக்கு பதிவு செய்ய காலதாமதம் ஏற்பட்டது, விபத்தில் காயமுற்ற சேகர் என்பவர் சிதம்பரம் அண்ணாமலை மருத்துவமனையில் 10 நாட்களுக்கும் மேலாக உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தார் என்றால் சரிதான்*** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

vi) மேற்படி மனு, எதிருரை, மனுதாரர் தரப்பு எழுத்துமூல வாதுரை, ம.சா.1, எ.ம.சா.1, எ.ம.சா.2, எ.ம.சா.3 ஆகிய சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் விபத்தானது

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:36:03 +0530

முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 51 T 8938 என்ற எண்ணுள்ள மகேந்திரா டிராக்டரின் ஓட்டுனரான முதல்எதிர்மனுதாரரே அதிவேகமாகவும், அஜாக்கிரதை யாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி இவ்விபத்து ஏற்பட்டுள்ளது என்று ம.சா.1 தனது மனுவிலும், சாட்சியத்திலும் தெளிவாக சொல்லியுள்ளார், ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையும், முதல் எதிர்மனுதாரர் செந்தில்குமார் என்பவர் மீது தான் போடப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையிலிருந்தும் தெளிவாக தெரியவருகிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

vii) எனவே, ம.சா.1ன் சாட்சியம், வாக்குமூலம் மற்றும் ம.சா.ஆ.1 முதல்தகவல் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 51 T 8938 என்ற எண்ணுள்ள மகேந்திரா டிராக்டரின் ஓட்டுனரான முதல்எதிர்மனுதாரரே அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் தான் மனுதாரருக்கு மனுவில் சொல்லியுள்ள காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரியவருகிறது என்றே பிரச்சனை எண்.1 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>09. பிரச்சனை எண்.2 :–</u>**

i) ஏற்கனவே பிரச்சனை எண்.1–க்கு விபத்தானது முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 51 T 8938 என்ற எண்ணுள்ள மகேந்திரா டிராக்டரின் ஓட்டுனரான முதல்எதிர்மனுதாரரே அதிவேகமாகவும், அஜாக்கிரதை யாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி இவ்வழக்கு விபத்து ஏற்பட்டது என்று தீர்வு காணப்பட்டுள்ளது.

ii) மேற்படி வாகனம் விபத்து காலத்தில் 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டு, அக்காப்பீடு விபத்து சமயத்தில் நிலுவையிலிருந்துள்ளது என்பதை நிரூபிக்க காப்பீட்டின் நகல் ம.சா.ஆ.3ஆக மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.3யை ஆய்வு செய்யும்போது முதல் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான வாகனத்திற்கு 12.05.2019 முதல் 11.05.2020 வரை இன்சூரன்ஸ்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:36:10 +0530

நிலுவையில் இருந்துள்ளது என்பதும், இக்கால இடைவெளியில் தான் அதாவது 09.02.2020 ஆம் தேதி தான் மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டுள்ளது என்பதும் தெளிவாக தெரியவருகிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

iii) 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வாக்குமூலத்தில் காலதாமதத்திற்கான காரணம் சொல்லப்படவில்லை என்பதால் வாகன பரிமாற்றம் நடந்திருக்கலாம் என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது என்றும், 1 ஆம் எதிர்மனுதாரர் செந்தில்குமார் விபத்து காலத்தில் ஓட்டுனர் உரிமம் இல்லாமலும், தலைகவசம் அணியாமலும் வாகனத்தை இயக்கி காப்பீட்டு உரிமை மீறல் செய்துள்ளதால் அவரே இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், விபத்து பதிவேட்டில் டிராக்டர் மோதியதாக சொல்லப்பட்டுள்ளது, எந்த நம்பர் என்று சொல்லப்படவில்லை, மருத்துவ விடுவிப்பு குறிப்பிலும் டிராக்டர் மோதியதாக சொல்லப்பட்டுள்ளது, ஆனால் வாகன எண் குறிப்பிடப்படவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கையில் வாகன எண் குறிப்பிடப்பட்டுள்ளது, 8 நாட்கள் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், விபத்து ஏற்பட்டதாக சொல்லப்படும் வாகனத்திற்கு காப்பீடு உள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி எ.ம.சா.1 ன் சாட்சியத்திலிருந்து 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான விபத்து வாகனத்தை ஓட்டிய அதன் ஓட்டுனரான 1 ஆம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதும், முதல் தகவலறிக்கையில் வாகன எண் குறிப்பிடப்பட்டுள்ளதிலிருந்து வாகன பரிமாற்றம் ஏதும் நடைபெறவில்லை என்பதும் புலனாகிறது.

iv) மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எ.ம.சா.ஆ.3 ஆவணமான 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் படி வாகனத்தின் உரிமையாளர் கலைமகள் என்றும், விபத்தின் போது வாகனத்தை ஓட்டியவர் முதல் எதிர்மனுதாரரான செந்தில்குமார் என்பவரது பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வாகன உரிமையாளரான கலைமகள் என்பவரிடமிருந்து முதல் எதிர்மனுதாரரான செந்தில்குமார் என்பவர் 27.05.2014 முதல் மேற்படி வாகனத்தை பெற்று, மேற்படி வாகனத்தின் உரிமையாளராக இருந்து வந்துள்ளார் வாகன பதிவு புத்தகம் ம.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் மேற்படி விபரம் தெரியவருகிறது. மேற்படி விபத்து வாகனம் மோட்டார் வாகன ஆய்வுக்கு

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:36:16 +0530

உட்படுத்தப்பட்டபோது அவரது ஓட்டுநர் உரிமம் குறித்த வரிசை எண்.7 காலத்தில் Not produced என குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் மனுதாரரும் தனக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதாக இந்நீதிமன்றத்தில் ஆவணங்களை தாக்கல் செய்து நிரூபணம் செய்யவும் இல்லை, எனவே, மேற்படி முதல் எதிர்மனுதாரர் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டி பாலிசி விதி மீறல் செய்துள்ளதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

v) எனவே, **2011 ACJ 926 (SC) Kusum Lata Vs.Satbir)** என்ற தீர்ப்புரையில் சொல்லப்பட்டுள்ளவாறு மனுதாரருக்குரிய இழப்பீட்டுத் தொகையை 2 ஆம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் செலுத்திவிட்டு, பின்னர் வாகன உரிமையாளரான முதல் எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டுமென்று பிரச்சனை எண்.2 ற்க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**10. பிரச்சனை எண்.3 :-**

ஏற்கனவே பிரச்சினை எண்.1, 2-ல் தீர்மானிக்கப்பட்ட படி மனுதாரருக்கு 09.02.2020 ல் நடந்த விபத்திற்கு முதல் எதிர்மனுதாரரான விபத்தின் போது வாகனத்தை ஓட்டிய அதன் உரிமையாளரான வாகன ஓட்டுனர் செந்தில்குமார் என்பவரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு தான் காரணம் என்றும், பாலிசி விதி மீறல் உள்ள நிலையில் மனுதாரருக்குரிய இழப்பீட்டுத் தொகையை 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் செலுத்திவிட்டு, பின் 1 ஆம் எதிர்மனுதாரரிடம் வசூலித்துக் கொள்ளலாம் என்றும் தீர்வு காணப்பட்டுள்ளது. இந்நிலையில் அடுத்ததாக எவ்வளவு இழப்பீட்டுத் தொகை மனுதாரருக்கு கிடைக்கக்கூடியது என்று தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது.

மனுதாரருக்கு மேற்படி விபத்தினால் வலது காலில் முட்டிக்கு கீழ் இரண்டு எலும்புகளில் எலும்பு முறிவும், வலது கால் முட்டிக்கு கீழ் கிழிந்த காயமும், இடது காலில் சீராய்ப்பு காயமும், இரண்டு கைகளிலும் சிராய்ப்பு காயமும், நெஞ்சு மற்றும் விலாவில் பலத்த உள்காயமும் ஏற்பட்டு, 108 ஆம்புலன்ஸ் மூலம் சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 09.02.2020 ஆம் தேதி உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, வலது கால் முட்டிக்கு கீழ் ஏற்பட்ட எலும்பு

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:36:23 +0530

முறிவிற்கு பிளேட் மற்றும் ஸ்குருக்கள் பொருத்தி அறுவை சிகிச்சை செய்யப்பட்டும், வலது காலில் ஏற்பட்ட கிழிந்த காயத்திற்கு 14 தையல் போட்டு சிகிச்சை அளிக்கப்பட்டும், பின்பு மற்ற காயங்களுக்கும் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு 27.02.2020 அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்பதும், 09.02.2020 அன்று மனுதாரர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, 21.02.2020 அன்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, 27.02.2020 அன்று விடுவிக்கப்பட்டுள்ளார் என்பதும் மேற்படி மருத்துவமனையில் வழங்கப்பட்ட விடுவிப்பு சான்று ம.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் புலனாகிறது.

**<u>I) பகுதிநேர ஊனம் (For Partial Permanent Disability)</u>**

நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **<u>M.Chinnathambi Vs National Insurance Company Limited</u>** வழக்கில் **<u>CMA No.4645/19</u>** தேதி 10.01.2020 என்ற உத்தரவில் ஊனச்சான்றிதழின் அடிப்படையில் பகுதிநேர ஊனத்தின் அளவை எவ்வாறு கணக்கிட வேண்டும் என்று கீழ்கண்டவாறு கூறியுள்ளது.

| Sl. No. | Year of Accident | Percentage | Amount (Rs.) |
|---|---|---|---|
| 1 | Before 2014 | 1% | Rs.3000/- |
| 2 | 2014-2015 | 1% | Rs.4000/- |
| 3 | 2016 onwards | 1% | Rs.5000/- |

மேலும் மனுதாரருக்கு மேற்படி விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் Permanent Disability ஏற்பட்டதாகவோ Functional Disablement ஏற்பட்டதாகவோ, அதனால் அவரது அன்றாட வாழ்க்கை மற்றும் Earning Capacity பாதிக்கப்பட்டதாகவோ எவ்வித ஆவணங்களும் இல்லை. மேலும் மனுதாரருக்கு பகுதிநேர நிரந்தர ஊனம் ஏற்பட்டதாக தெரியவருகிறது. எனவே, மேற்படி முன்னோடி தீர்ப்பை பின்பற்றி மனுதாரரின் பகுதி நேர நிரந்தர ஊனத்திற்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத் தொகையை கருத்தில் கொண்டு பார்க்கும்போது ...

நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ***<u>N.Sivakumar Vs The</u>*** **<u>Managing Director Tamil Nadu State Transport Corporation,</u>** ***<u>என்ற வழக்கில் CMA No.2202/23</u> தேதி 10.01.2020 என்ற உத்தரவில்***

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:36:29 +0530

***Future General India Insurance Comp. Ltd., (Cited Supra) Wherein, a sum of Rs.7,000/- is fixed towards per percentage of disability in respect of a claim made by the claimant for having sustained injuries in the accident occured in the year 2018 என்ற முன்னோடி தீர்ப்பின் அடிப்படையில் 1 சதவிகித ஊனத்திற்கு ரூ.7,000/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே*** 1 சதவிகித ஊனத்திற்கு மேற்படி முன்னோடி தீர்ப்பின் அடிப்படையில் **ரூ.7,000/- வீதம் 30% சதவிகித ஊனத்திற்கு 30%× ரூ.7,000/- = ரூ.2,10,000/- வழங்கலாம் என்று தீர்வுகாணப்படுகிறது.**

**ii) வலி மற்றும் வேதனை (pain and Sufferings, mental agony):-**

மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு வலது காலில் முட்டிக்கு கீழ் இரண்டு எலும்புகளில் எலும்பு முறிவும், வலது கால் முட்டிக்கு கீழ் கிழிந்த காயமும், இடது காலில் சீராய்ப்பு காயமும், இரண்டு கைகளிலும் சிராய்ப்பு காயமும், நெஞ்சு மற்றும் விலாவில் பலத்த உள்காயமும் ஏற்பட்டு, மனுதாரருக்கு வலது காலில் ஏற்பட்ட இரண்டு எலும்பு முறிவினால் சதைபகுதி முற்றிலும் சேதமடைந்தும், நரம்புகளும் சேதமடைந்து ரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டதால் வலது காலின் அசைவுத்திறன் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், இடது காலை விட வலது காலின் உயரம் சுமார் 2 செ.மீ. அளவுக்கு குறைந்து காணப்படுவதால் வலது காலை தாங்கியும், மற்றும் ஊன்றுகோலுடன் தான் நடக்க முடிகிறது என்றும், தனது அன்றாட பணிகளை செய்ய முடியாததால் மனுதாரரை பராமிக்க தனியாக ஒரு நபர் தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளதிலிருந்து ***வலி மற்றும் வேதனைக்காக அவருக்கு ரூ.1,00,000/- கிடைக்கக்கூடியது என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.***

**iii) வசதி வாய்ப்பு இழப்பிற்காக (Loss of Amenities)**

மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு வலது காலில் ஏற்பட்ட இரண்டு எலும்பு முறிவினால் சதைபகுதி முற்றிலும் சேதமடைந்தும், நரம்புகளும் சேதமடைந்து ரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு வலது காலின் அசைவுத்திறன் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், இடது காலை விட வலது காலின் உயரம் சுமார் 2 செ.மீ. அளவுக்கு குறைந்து காணப்படுவதால் வலது காலை தாங்கியும், மற்றும் ஊன்றுகோலுடன் தான் நடக்க முடிகிறது என்றும், விபத்தின் காரணமாக தான் செய்து வந்த கொத்தனார் வேலையை

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:36:36 +0530

செய்ய முடியாததால் நிரந்தர வருமான இழப்பும், நிரந்தர ஊனமும் ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளதை கருத்தில் கொண்டு **அவரது வசதி வாய்ப்பு இழப்பிற்காக ரூ.1,00,000/- வழங்க இந்தத் தீர்ப்பாயம் முடிவுசெய்கிறது.**

**iv) ஊட்டச்சத்துணவு செலவிற்காக (Extra Nourishment)**

மனுதாரர் விபத்து நடந்தவுடன் சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கபட்டு 09.02.2020 முதல் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, 21.02.2020 அன்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, 27.02.2020 அன்று விடுவிக்கப்பட்டுள்ளார் என்பதை கருத்தில் கொண்டு மனுதாரர் மருத்துவமனையில் இருந்த காலகட்டத்திலும், அறுவை சிகிச்சை செய்தபிறகு உள்ள காலகட்டங்களிலும் சத்துள்ள ஆகாரங்களை உட்கொண்டிருக்க வேண்டும் என்பதை கருதி **ஊட்டச்சத்துணவிற்காக ரூ.10,000/- வழங்க இந்தத் தீர்ப்பாயம் முடிவுசெய்கிறது.**

**v) உதவியாளர் செலவு ( Attender Charges)**

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.5 ஆவணமான டிஸ்சார்ஜ் சம்மரி மூலம் மனுதாரர் 09.02.2020 முதல் 27.02.2020 வரை மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்ட காலகட்டத்தில் அவருடன் இருந்து அவரை கவனித்துக்கொள்ள உதவியாளர் இருந்திருக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு **உதவியாளருக்கான செலவிற்காக ரூ.10,000/-மனுதாரருக்கு வழங்க** இந்தத் தீர்ப்பாயம் முடிவுசெய்கிறது.

**vi) போக்குவரத்து செலவு (Transport Charges)**

மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று வந்த வகையிலும் அதன் பிறகு மருத்துவமனைக்கு சென்று வந்த வகையிலும் போக்குவரத்து செலவு ஏற்பட்டிருக்க கூடும் என்பதை கருத்தில் கொண்டு, மனுதாரருக்கு **போக்குவரத்து செலவிற்காக ரூ.10,000/- கிடைக்கக்கூடியது என்று இத் தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.**

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:36:42 +0530

**vii) உத்தேச வருமானம் (Notional Income) மற்றும் தற்காலிக வருமான இழப்பு (For Temporary Loss of Income)**

மேற்படி விபத்தின் போது 47 வயது என்றும், மனுதாரர் 15 வருடங்களுக்கு மேலாக கொத்தனார் வேலை செய்து மாதம் ரூ.18,000/- வரை சம்பாதித்து தனது குடும்பத்தை காப்பாற்றி வந்ததாக மனுதாரர் குறிப்பிட்டிருந்த போதிலும், அதற்கு எவ்வித ஆவணங்களும் முன்னிருத்தப்படவில்லை. 2015 (2) TANMAC Page 159 மற்றும் 2014 (1) TNMAC Page 459 மாத வருமானத்தை நிரூபணம் செய்ய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டாத பட்சத்தில் ரூ.6,500/- என்று கருத்தில்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளது. ஆனால் மேற்படி முன்னோடி தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ள காலகட்டம் மற்றும் இன்றைய காலகட்டத்தை கருத்தில்கொண்டு பார்க்கும்போது விலைவாசி ஏற்றம் மற்றும் பொருளாதார செலவினங்கள், தினசரி வாழ்க்கையை கருத்தில் கொண்டு பார்க்கும்பொழுது மனுதாரரின் உத்தேச வருமானமாக மாதம் ரூ.12,000/- என்று நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரருக்கு காலில் ஏற்பட்ட எலும்பு முறிவின் காரணமாக அவர் குறைந்தபட்சம் 7 மாதங்கள் வரையாவது வழக்கம் போல் தனது அன்றாட பணிகளை செய்வதற்கும் வேலைக்கு செல்வதற்கும் முடிந்திருக்காது. எனவே, சுமார் 7 மாதங்கள் அவருக்கு தற்காலிக வருமான இழப்பு ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு என கருத்தில் கொண்டால் **ரூ.12,000/- (உத்தேச வருமானம்) × 7 மாதங்கள் = ரூ.84,000/- வருமான இழப்பிற்காக அவருக்கு கிடைக்கக்கூடியது என்று இந்தத் தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.**

**viii) மருத்துவ செலவு (Medical Bills) :-**

மனுதாரர் சிகிச்சையில் இருந்தபோது மருந்துகள் வாங்கி உட்கொண்ட வகைக்கு மருத்துவ பில்கள் ம.சா.ஆ.7 ல் ரூ.10,106/-ற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி தலைப்பின் கீழ் **அவருக்கு ம.சா.ஆ.7 ஆவணத்தில் கண்டுள்ள ரூ.10,106/-தொகை மனுதாரருக்கு கிடைக்கக்கூடியது என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.**

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:36:49 +0530

**ix) எதிர்கால மருத்துவ செலவு (Future Medical Expenses):-**

மனுதாரரின் எதிர்கால மருத்துவ செலவு குறித்து ம.சா.2 சாட்சியம் அளித்து மனுதாரரின் எதிர்கால செலவிற்காக ரூ.50,000/-வரை செலவாகும் என்று ம.சா.ஆ.9 யை தாக்கல் செய்துள்ளார். எனவே, மேற்படி ம.சா.ஆ.9 ஆவணத்தின் படி ரூ.50,000/- **மனுதாரருக்கு மேற்படி தலைப்பின் கீழ் கிடைக்க தக்கது என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.**

**11. கீழ்கண்ட பட்டியலின் கீழ் இழப்பீட்டுத்தொகை கணக்கிடப்படுகிறது.**

| **வ. எண்** | **தலைப்பு** | | **இழப்பீட்டுத் தொகை** |
|---|---|---|---|
| 1. | பகுதிநேர ஊனம் (For Partial Permanent Disability)<br>30%× ரூ.7,000/- = ரூ.2,10,000/- | ரூ. | 2,10,000/- |
| 2. | வலி மற்றும் வேதனைக்கு இழப்பீடாக (pain and Sufferings, mental agony) | ரூ. | 1,00,000/- |
| 3. | வசதி வாய்ப்பு இழப்பிற்காக (Loss of Amenities) | ரூ. | 1,00,000/- |
| 4. | ஊட்ட சத்துணவு செலவிற்காக (Extra Nourishment) | ரூ. | 10,000/- |
| 5. | உதவியாளர் செலவு ( Attender Charges) | ரூ. | 10,000/- |
| 6. | போக்குவரத்து செலவிற்காக | ரூ. | 10,000/- |
| 7. | உத்தேச வருமானம் (Notional Income) மற்றும் தற்காலிக வருமான இழப்பு (For Temporary Loss of Income)<br>ரூ.12,000 X 7 மாதங்கள் = ரூ.84,000/- | ரூ. | 84,000/- |
| 8. | மருத்துவசெலவு (Medical Bills) ம.சா.ஆ.7 | ரூ. | 10,106/- |
| 9. | எதிர்கால மருத்துவ செலவு (Future Medical Expenses) | ரூ. | 50,000/- |
| | **மொத்தம்** | **ரூ.** | **5,84,106/-** |

ஆக மொத்தம் மனுதாரருக்கு மொத்த இழப்பீட்டுத் தொகையாக **ரூ.5,84,106/- (ரூபாய். ஐந்து லட்சத்து எண்பத்து நான்காயிரத்து நூற்று ஆறு மட்டும்)** கிடைக்கத்தக்கது என்று முடிவு செய்யப்படுகிறது.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:36:56 +0530

**12.** மனுதாரரை 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது தனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான் என்று மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் மனுதாரருக்கு கிடைக்கக் கூடிய இழப்பீட்டுத் தொகையான **ரூ.5,84,106/–ல் Contribution Negligence ன் படி மொத்த தொகையில் 10% கழித்து ரூ.5,84,106/– X 10% = (–) ரூ.58,411 கழித்தது போக மீதமுள்ள தொகையான ரூ.5,25,695/– (ரூபாய். ஐந்து லட்சத்து இருபத்தைந்தாயிரத்து அறநூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்) மனுதாரருக்கு கிடைக்கதக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.**

**<u>13. பிரச்சனை எண்.4</u> :–**

மனுவின் செலவுத்தொகை மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றும் வேறு பரிகாரம் எதுவும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் பிரச்சனை எண்.4–க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**14**. i) முடிவில், இம்மனு பகுதியாக மனுதாரரின் செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, 2 ஆம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மொத்த இழப்பீட்டு தொகையாக **ரூ.5,25,695/– (ரூபாய். ஐந்து லட்சத்து இருபத்தைந்தாயிரத்து அறநூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்)** கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

ii) பாலிசி விதி மீறல் உள்ள நிலையில், மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் செலுத்திவிட்டு, பின்னர் வாகன உரிமையாளரான முதல் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. **(Pay and Recovery is ordered).**

iii) மேற்படி இழப்பீட்டு தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை மனுதாரரின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் காலம் தவிர 7.5 % சதவிகிதம் ஆண்டு வட்டி சேர்த்து இந்த உத்தரவு தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2026.04.18 19:37:03 +0530

iv) மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2 ஆம் எதிர்மனுதாரர் மயிலாடுதுறை பாரத மாநில வங்கி கிளையில் உள்ள இந்த மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய கணக்கு எண்.42800964666–ல் NEFT or RTGS மூலம் செலுத்த வேண்டும் மென்றும், செலுத்திய விபரத்தை இந்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் / உரிமைகோருபவர் மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயத்திலிருந்து NEFT or RTGS மூலம் வட்டியுடன் சேர்ந்த அவரது முழு இழப்பீட்டு தொகையை வங்கியில் திரும்பப்பெற அனுமதிக்கப்படுகிறார்.

v) பாக்கி நீதிமன்றக் கட்டணம் ரூ.4254/–யை மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்ளுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

வழக்குரைஞர் கட்டணம் ரூ.22,757/– என நிர்ணயம் செய்யப்படுகிறது.

இவ்வுத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18 ஆம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:37:09 +0530

மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

**Particulars provided as per the Judgment of Hon'ble Madras High Court in M/S Cholamandalam MS Genl Ins.Co.Ltd., – Vs– Mr.Ayyanar, Tr.C.M.P.No.264 to 2020, dated 11.05.2020 தேதியிட்ட உத்தரவுப்படி தீர்ப்பாணை தனியாக தயாரிக்கப்படவில்லை.**

***மனு எண்.27/2020***

| | | |
|---|---|---|
| 1. | (Name and Address of the Claimant)<br>(மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்) | சேகர், வயது 47, த.பெ.சண்முகம்,<br>நெ.403, மெயின்ரோடு,<br>அல்லிவிளாகம் கிராமம்,<br>செம்பதனிருப்பு அஞ்சல்,<br>சீர்காழி தாலுக்கா,<br>நாகப்பட்டினம் மாவட்டம்,<br>தற்போது மயிலாடுதுறை மாவட்டம், |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:37:15 +0530

| | | |
|---|---|---|
| 2. | Name and Address of the Respondents (எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்) | 1.செந்தில்குமார், வயது 40, த.பெ.சின்னையன்,<br>நெ.19 ஏ அழகாபுரம் கிராமம்,<br>ஆச்சாள்புரம் அஞ்சல், சீர்காழி தாலுக்கா,<br>சீர்காழி தாலுக்கா,<br>மயிலாடுதுறை மாவட்டம்,<br><br>2. மேலாளர்,<br>ஸ்ரீராம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்,<br>நெ.E-8, RICO Industrial Area,<br>சித்தப்புரா, ஜெய்ப்பூர்,<br>ராஜஸ்தான் மாநிலம். |
| 3. | Date of Filing of the Claim Petition (மனுதாக்கல் செய்யப்பட்டநாள்) | 12.03.2020, 19.06.2020 |
| 4. | Date of Award (உத்தரவு பகரப்பட்ட நாள்) | 16.04.2026 |
| 5. | Amount of Award (வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை) | **ரூ.5,25,695/- (ரூபாய். ஐந்து லட்சத்து இருபத்தைந்தாயிரத்து அறநூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்)** |
| 6. | Interest Rate Applicable | 7.5% |
| 7. | Date from which interest is payable (எந்த நாளிலிருந்து வட்டி வழங்கப்படவேண்டும்) | மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை (மனுதாரரின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்ட காலத்தை தவிர்த்து) வட்டி வழங்க உத்தரவிடப்படுகிறது (Dismissed for default period நீங்கலாக) |
| 8. | Costs if any | 2 ஆம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலவுத் தொகையான **ரூ.27,645/-** யை கொடுக்க வேண்டும் என்று உத்திரவிடப் படுகிறது.<br><br>2 ஆம் எதிர்மனுதாரருக்கு இம்மனுவில் ஏற்பட்ட செலவுத்தொகை ரூ.12,210/-யை அவரே ஏற்கவேண்டும்.<br><br>***(Stamp Duty of Rs.4629.45- 375= Rs.4254.45 @ Rs.4254/-The Petitioner shall pay the balance Court Fee of Rs.4254/- within 10 days.*** |
| | | **Particulars of costs** |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:37:22 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | | **For Petitioner** | **For Respondent** |
| | | | **Rs.** | **Rs.** |
| | | Court fee Rs.4629.45- 375= Rs.4254.45 @ Rs.4254 /- | 4629.00 | -- |
| | | Stamp in Vakalath | 10.00 | 10.00 |
| | | Fee for services of process | 19.00 | -- |
| | | Stamp on Exhibits | 30.00 | -- |
| | | Typing charge | 200.00 | 200.00 |
| | | Advocate fee | 22,757.00 | 12,000.00 |
| | | **Total** | **27,645.00** | **12,210.00** |
| 9. | The Mode and manner of deposit of Compensation<br>(இழப்பீட்டுத் தொகையை வைப்பீடு செய்யப்படும் வழிமுறை) | **முடிவாக, இம்மனு கீழ்கண்டவாறு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.**<br>i) 2 ஆம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மொத்த இழப்பீட்டு தொகையாக **ரூ.5,25,695/- (ரூபாய். ஐந்து லட்சத்து இருபத்தைந்தாயிரத்து அறநூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்)** கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.<br><br>ii) பாலிசி விதி மீறல் உள்ள நிலையில், மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் செலுத்திவிட்டு, பின்னர் வாகன உரிமையாளரான முதல் எதிர்மனுதாரரிட மிருந்து வசூலித்துக் கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. **(Pay and Recovery is ordered).**<br><br>iii) மேற்படி இழப்பீட்டு தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை மனுதாரரின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் காலம் தவிர 7.5 % சதவிகிதம் ஆண்டு வட்டி சேர்த்து இந்த | | |

SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2026.04.18 19:37:28 +0530

| | | |
|---|---|---|
| | | உத்தரவு தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>iv) மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2ஆம் எதிர்மனுதாரர் மயிலாடுதுறை பாரத மாநில வங்கி கிளையில் உள்ள இந்த மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய கணக்கு எண்.42800964666-ல் NEFT or RTGS மூலம் செலுத்த வேண்டும் மென்றும், செலுத்திய விபரத்தை இந்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் / உரிமைகோருபவர் மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயத்திலிருந்து NEFT or RTGS மூலம் வட்டியுடன் சேர்ந்த அவரது முழு இழப்பீட்டு தொகையை வங்கியில் திரும்பப்பெற அனுமதிக்கப்படுகிறார்.<br><br>v) பாக்கி நீதிமன்றக் கட்டணம் ரூ.4254/-யை மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்ளுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.<br><br>வழக்குரைஞர் கட்டணம் ரூ.22,757/- என நிர்ணயம் செய்யப்படுகிறது. |
| 10. | The Mode and manner of Disbursement (மேற்படி இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் வழிமுறை) | Through RTG |
| 11. | Date of payable Balance Court Fee (பாக்கி நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டிய நாள்) | பாக்கி நீதிமன்றக் கட்டணத்தை மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது. |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.18 19:37:34 +0530

மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

**1. மனுதாரர் தரப்பு சாட்சிகள்**

ம.சா.1 – திரு. சேகர்

ம.சா.2 – திரு. ஸ்ரீதர் – ஜி.வி. மருத்துவமனையின் மருத்துவர்

**2. மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ1 | 17.02.2020 | முதல் தகவலறிக்கை நகல் |
| ம.சா.ஆ.2 | 27.05.2014 | 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் வாகன பதிவு சான்று நகல் |
| ம.சா.ஆ.3 | 12.05.2019 | முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு சான்று நகல் |
| ம.சா.ஆ.4 | 09.02.2020 | விபத்து பதிவேடு |
| ம.சா.ஆ.5 | 12.02.2020 | டிஸ்சார்ஜ் சம்மரி |
| ம.சா.ஆ.6 | -- | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை மற்றும் வங்கி கணக்கு புத்தகம் நகல் |
| ம.சா.ஆ.7 | 16.02.2020 – 04.03.2020 | மருத்துவபில்கள் |
| ம.சா.ஆ.8 | 02.03.2023 | நுண்கதிர் படம் |
| ம.சா.ஆ.9 | 02.03.2023 | எதிர்கால மருத்துவ செலவு குறித்து ம.சா.2 வழங்கிய சான்று |

**3. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :-**

எ.ம.சா.1 ஸ்டீபன் ஜேம்ஸ் மைக்கேல்– 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் சட்ட அலுவலர்

எ.ம.சா.2 ஜெயகிருஷ்ணன் – சீர்காழி மோட்டார் வாகன அலுவலக இளநிலை உதவியாளர்

எ.ம.சா.3 சாமிநாதன் – ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர்

**4. சாட்சிய சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| சா.சா.ஆ.1 | 03.07.2024 | எ.ம.சா.2ன் அலுவலகத்தில் வழங்கிய அத்தாட்சி கடிதம் |
| சா.சா.ஆ.2 | 03.03.2020 | மனுதாரர் வாகனமான TN 82 Y 9775 Hero Splendor வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் |
| சா.சா.ஆ.3 | 19.02.2020 | 1ஆம் எதிர்மனுதாரர் வாகனமான TN 51 T 8938 மகேந்திரா டிராக்டர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் |

SUDHA P Digitally signed by SUDHA P
Date: 2026.04.18 19:37:41 +0530

**<u>5. எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–</u>**

எ.ம.சா.ஆ.1 12.05.2019 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு நகல்

**6. நீதிமன்றச் சான்றாவணம் :–**

நீ.ம.சா.ஆ 1 – 19.03.2021 நாகப்பட்டினம் மாவட்ட மருத்துவக் குழு வழங்கிய ஊனச்சான்று

SUDHA P Digitally signed by SUDHA P
Date: 2026.04.18 19:37:47 +0530

மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

Draft/ Fair Order
MCop No.27-2020
Date: 18.04.2026.